**மன்றப்பொருள்**

**2020 ம் ஆண்டு மார்ச் 31.03.2020 ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டம் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.**

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (கூ.பொ) அவர்களின் மார்ச் 2020ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்

2. கடலூர், தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரிய உதவிப்பொறியாளர் அவ.ர்களின் 21.02.2020ம் தேதிய கடித எண் 09/003/க.கோட்டம் / திருவதிகை / 2020 கடிதத்தின்மூலம் தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரிய த்தின் மூலமாக பிரதமரின் '' அனைவருக்கும் வீடு'' திட்டத்தின் கீழ் 144 எண்ணிக்கை கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு திருவதிகை கிராமம், சர்வே வார்டு –D, பிளாக்-13, நகரளவு எண் 7/4ல் 6400 சதுர மீட்டர் இடமானது மாவட்ட ஆட்சியரின் முன்நுழைவு அளிக்கப்பட்டு, கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி உதவி இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறைக்கு விண்ணப்பம் அளிக்கப்பட்டதில் மேற்படி இடம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் (Master Plan) விவசாயப்பகுதியில் அமைவதால் அதனை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்திட கோரப்பட்டுள்ளது.
மேற்படி, திட்டம் அரசின் சிறப்பு திட்டம் என்பதாலும், ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வீடு வழங்கும் திட்டம் என்பதாலும், மக்களின் நலன் கருதி திருவதிகை கிராமம், சர்வே வார்டு –D, பிளாக்-13, நகரளவு எண் 7/4ல் 6400 சதுர மீட்டர் இடமானது அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் (Master Plan) விவசாயப்பகுதியில் அமைவதால் அதனை குடியிருப்பு பகுதியாக நிலஉபயோக பயன்பாடு மாற்றம் செய்து அரசாணை வெளியிட சென்னை நகர் ஊரமைப்புத்துறை ஆணையர் மூலமாக அரசு முதன்மை செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையினை கேட்டுக்கொள்ளவும், அவ்வாறு நிலஉபயோக பயன்பாடு செய்திட தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் விளம்பரம் செய்திட ஆகும் செலவினத்தொகையையும் உத்தேச பகுதி திருவதிகை கிராமம், சர்வே வார்டு –D, பிளாக்-13, நகரளவு எண் 7/4 மனையிடத்தின் ஊடே செல்லும் உயர்மின் அழுத்தப்பாதையை மின்வாரியத்துறை மூலம் மாற்றியமைக்க ஆகும் செலவினத் தொகையும் சம்மந்தப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியமே செலுத்திடவும் கோரிட மன்றம் மற்றும் உள்ளூர் திட்டக்குழும் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

(அலுவலக குறிப்பு)**1.** மன்றம் அனுமதிக்கலாம்

**2.** முழுமைத்திட்டத்தில் (Master Plan) விவசாயப்பகுதியில் அமைவதால் அதனை குடியிருப்பு பகுதியாக நிலஉபயோக பயன்பாடு மாற்றம் செய்து அரசாணை வெளியிடுமாறு சென்னை நகர் ஊரமைப்புத்துறை ஆணையர் மூலமாக அரசு முதன்மை செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையினை கேட்டுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**3.** நிலஉபயோக பயன்பாடு செய்திட தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் விளம்பரம் செய்திட ஆகும் செலவினத்தொகையையும், உத்தேச பகுதி திருவதிகை கிராமம், சர்வே வார்டு –D, பிளாக்-13, நகரளவு எண் 7/4 மனையிடத்தின் ஊடே செல்லும் உயர்மின் அழுத்தப்பாதையை மின்வாரியத்துறை மூலம் மாற்றியமைக்க ஆகும் செலவினத் தொகையும் சம்மந்தப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியமே செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**கோ.எண் 360/2020/எப்1**

3. விழுப்புரம் மண்டலம், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை அவர்களின் செயல்முறை ஆணையில், மனுதாரர் திரு S.விஜயன் என்பவர் பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், பண்ருட்டி கிராமம், புது சர்வே வார்டு–A. பிளாக்–32, நகரளவு எண் 10/5A ptல் (பழைய சர்வே எண் 239 pt) 0.75 ஏக்கர் (அல்லது) 32670 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள **"அன்பு நகர்''** என்கிற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண்** (R)490/2019 என எண்ணிட்டு கீழ்காணும் விவரப்படி, சில நிபந்தனைகளை விதித்து கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | – | 0.75 ஏக்கர் (அல்லது) 32670 சதுர அடி |
| மொத்த மனைகள் | – | 19 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 1 |
| விற்பனை செய்யப்பட்ட மனை எண் | – | 9 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 18 |
| விற்பனை செய்யப்படாத மனை எண்கள் | | 1 to 8, 10 to 19 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | – | 19223.00 சதுர அடி |

1. பரிசீலனைக் கட்டணம் விவரம்

| | | |
|---|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ500/- வீதம் 01.07.2019ல் பரிசீலினை கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | | 1 to 8, 10 to 19 |

**திறந்தவெளி** (OSR) **ஒதுக்கீடுகள் (தன்னிச்சையாக உள்ளாட்சிக்கு முழு உரிமையாகிறது)**

| ஒதுக்கீடு விவரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| பூங்கா (மனை எண் 18, 19) | 1979.00 சதுர அடி | 10.29 % |

**நிபந்தனைகள்**

1. **கூராய்வு கட்டணம் –** விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கு தனி மனை உரிமையாளரால் கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்டதற்கான (Registration Slip) நகர் ஊரமைப்பு துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நகல் இணைத்துள்ளார். மனை எண்கள் 1 to 8, 10 to 17க்கு ரூ500/- செலுத்திய இரசீது சமப்பிக்கப்பட வேண்டும். வேண்டும்.
2. **வரன்முறைபடுத்துதல் கட்டணம் –** மனை 2எண்கள் 1 to 8, 10 to 17க்கு பரப்பளவு 1603 ச.மீ அளவிற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ90/- வீதம் ரூ 1,44,270/-ஐ அரசு கணக்கு தலைப்பில் வரன்முறை கட்டணம் மனை / மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டும். அதன் விவரம் நகராட்சிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
3. **வளர்ச்சி கட்டணம் –** மனை 2எண்கள் 1 to 8, 10 to 17க்கு பரப்பளவு 1603 ச.மீ அளவிற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ150/- வீதம் ரூ 2,40,450/-ஐ மனை / மனைப்பிரிவு உரிமையாளரிடமிருந்து பெற்று உள்ளாட்சி தனிக்கணக்கில் வரவு வைக்க வேண்டும். இந்நிதியினை வேறு பயன்பாடு எதற்கும் பயன்படுத்துல் கூடாது.
4. **கொள்கை அளவில் ஒப்புதல்** அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள் 04.05.2017, 13.10.2017ன்படி, உள்ளாட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது. மனுதாரரிடம் தானமாக ரூ100/- முத்திரை தாளில் தானமாக பெறப்பட வேண்டும்.
5. **நில உரிமம்** குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும், நீதிமன்ற வழக்குகள் உரிமை சம்மந்தமாக வருமாயின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புயின்றி ரத்து செய்யப்படும்.
6. **அரசாணையில்** தெரிவிக்கப்பட்டவாறு அனைத்து கட்டணங்களும் விற்கப்படாத மனைகளுக்கு (அல்லது) பகுதி மனைக்கு மனைமுழுமையாக மனை உரிமையாளர்களால் செலுத்தப்பட்ட பின்னரே, தனி மனை / மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி உத்திரவு உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

**அலுவலக குறிப்பு**

1. நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் கொள்கை அளவிலான மனைப்பிரிவி ஒப்புதல் வரைபடத்தினைமன்றம் பதிவு செய்யலாம். **(கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண்** (R)490/2019)
2. அரசாணைகளின்படியும், மனைப்பிரிவு நிபந்தனைகளின்படியும், நடவடிக்கை மேற்கொண்டு மனை / மனைப்பிரிவினை ஒப்புதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண் 1600/2019/எப்1)**

4. விழுப்புரம் மண்டலம், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை அவர்களின் செயல்முறை ஆணையில், மனுதாரர் திரு V.ராதாகிருஷ்ணன் மற்றும் திருR.முத்துகுமரன் ஆகியோர்கள் பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், வடகைலாசம் கிராமம், புது சர்வே வார்டு–B. பிளாக்–19, நகரளவு எண் 45ல் 3.65 ஏக்கர் (அல்லது) 158994 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள **“ VMS நகர்’’** என்கிற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண்** (R) 740/2019 என எண்ணிட்டு கீழ்காணும் விவரப்படி, சில நிபந்தனைகளை விதித்து கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம்**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | – | 3.65 ஏக்கர் (அல்லது) 158994 சதுர அடி |
| மொத்த மனைகள் | – | 76 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 62 |
| விற்பனை செய்யப்பட்ட மனை எண்கள் | – | 1 to 46, 58 to 67, 69, 70 to 74 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 14 |
| விற்பனை செய்யப்படாத மனை எண்கள் | | 48 to 57, 68 & 75 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | – | 23954.00 சதுர அடி |

2. பரிசீலனைக் கட்டணம் விவரம்

| | | |
|---|---|---|
| இணைய தளம் வாயிலாக னை ஒன்றிற்கு ரூ500/- வீதம் பரிசீலினை கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | | 48 to 57, 68 |

**திறந்தவெளி (OSR) ஒதுக்கீடுகள் (உள்ளாட்சியால் தன்னிச்சையாக பெறப்பட வேண்டியது)**

| ஒதுக்கீடு விவரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| பூங்கா (மனை எண் 47, 76) | 2468.00 சதுர அடி | 10.29 % |

**நிபந்தனைகள்**

1. **கூராய்வு கட்டணம் –** விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கு தனி மனை உரிமையாளரால் கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்டதற்கான (Registration Slip) நகர் ஊரமைப்பு துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நகல் இணைத்துள்ளார். ஒரே மனை 75க்கு ரூ500/– செலுத்திய இரசீது சமப்பிக்கப்பட வேண்டும். வேண்டும். **வரன்முறைபடுத்துதல் கட்டணம் –** 12 மனைகளின் எண்ணிக்கைக்கு பரப்பளவு 1997 ச.மீ அளவிற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ90/- வீதம் ரூ 1,79,730/-ஐ அரசு கணக்கு தலைப்பில் வரன்முறை கட்டணம் மனை / மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டும். அதன் விவரம் நகர் ஊரமைப்பு துறைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. **வளர்ச்சி கட்டணம் –** 12 மனைகளின் எண்ணிக்கைக்கு பரப்பளவு 1997 ச.மீ அளவிற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ150/- வீதம் ரூ 2,99,550/-ஐ மனை / மனைப்பிரிவு உரிமையாளரிடமிருந்து பெற்று உள்ளாட்சி தனிக்கணக்கில் வரவு வைக்க வேண்டும். இந்நிதியினை வேறு பயன்பாடு எதற்கும் பயன்படுத்துல் கூடாது.
3. **கொள்கை அளவில் ஒப்புதல்** அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள் 04.05.2017 ன்படி, உள்ளாட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது. மனுதாரரிடம் தானமாக ரூ100/– முத்திரை தாளில் தானமாக பெறப்பட வேண்டும்.
4. **நில உரிமம்** குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும், நீதிமன்ற வழக்குகள் உரிமை சம்மந்தமாக வருமாயின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புயின்றி ரத்து செய்யப்படும்.
5. **அரசாணையில்** தெரிவிக்கப்பட்டவாறு அனைத்து கட்டணங்களும் விற்கப்படாத மனைகளுக்கு (அல்லது) பகுதி மனைக்கு மனைமுழுமையாக உரிமையாளர்களால் செலுத்தப்பட்ட பின்னரே, தனி மனை / மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி உத்திரவு உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

**அலுவலக குறிப்பு**

1. நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் கொள்கை அளவிலான மனைப்பிரிவி ஒப்புதல் வரைபடத்தினைமன்றம் பதிவு செய்யலாம். **(கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண்** (R) 740/2019)
2. அரசாணைகளின்படியும், மனைப்பிரிவு நிபந்தனைகளின்படியும், நடவடிக்கை மேற்கொண்டு மனை / மனைப்பிரிவினை ஒப்புதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 2168/2019/எப்1**

5. இந்நகராட்சியில் வருவாய் நிதி 2019–2020–ன் கீழ் நகராட்சி தெருமின்விளக்கு பராமரிப்பு பணிக்கு 31.01.2020–ம் தேதிய நகர்மன்ற அனுமதி வழங்கி உள்ளதிற்கிணங்க 12.03.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின்ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு. வி.சுரேஷ்பாபு | 2.00 | 2.29% அதிகம் |
| 2. | திரு. என்.ஆர்.முருகன் | 2.00 | 0.68% குறைவு |

**அலுவலக குறிப்பு :** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. என்.ஆர். முருகன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.68% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி முன் அனும வழங்கி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோ.எண். 92/2020/இ2**

6. பண்ணுருட்டி நகாட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN 31 AH 7374 வாகனத்தில் உள்ள பேட்டரி பழுதடைந்து வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது எனவும், இந்நிலையில் வாடகை அடிப்படையில் பேசி பேட்டரி வாங்கி பயன்படுத்தி வருவதாகவும், பழுதடைந்த பேட்டரியை அகற்றிவிட்டு புதிய பேட்டரி ஒன்று வாங்கி பொருத்தி தரக்கோரியும் ஈப்பு வாகன ஓட்டுனர் மனு சமர்ப்பித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், மண்டல இயக்குநர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர் கூட்டத்திற்கு அடிக்கடிெ சல்ல வேண்டியுள்ளதாலும், பொதுமக்களின் அன்றாட அத்தியாவசிய பணியினை பார்வையிட வேண்டியுள்ளதாலும், ஈப்பு வாகனம் உடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட ஈப்பு வாகனத்திற்கு Exide Ey 700 12V 65AH பேட்டரி வாங்கி பொருத்த தோராய செலவினமாக ரூ. 6000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மெற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தனி அலுவலர் அவர்கள் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோர முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 460/2020/இ1**

7. பண்ணுருட்டி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN31 AH7374 வாகனத்தில் உள்ள பேட்டரி பழுதடைந்து வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது எனவும், பழுதடைந்த பேட்டரியை அகற்றிவிட்டு புதிய பேட்டரி ஒன்று வாங்கி பொருத்தி தரக்கோரி ஈப்பு வாகன ஓட்டுநர் மனு சமர்ப்பித்துள்ளார். எனவே, மேற்கண்ட ஈப்பு வாகனத்தில் புதிய பேட்டரி வாங்கி பொருத்த நகரமன்ற தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியுள்ளதிற்கிணங்க 09.03.2020–ல் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி கீழ்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விவரம்

| வ.எண். | நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீசாய்ராம் பேட்டரி<br>36பி, கும்பகோணம் மெயின் ரோடு,<br>(லிங்க் சாலை ரவுண்டானா எதிர்புறம்), பண்ருட்டி. | ரூ. 5500.00 |
| 2 | KB பேட்டரி சென்டர்,<br>பி.என்.பாளையம், கடலூர் மெயின் ரோடு,<br>மேல்பட்டாம்பாக்கம். | ரூ. 5750.00 |
| 3 | M/s. ஸ்ரீதுர்கா பேட்டரி ஒர்க்ஸ்,<br>மாளிகைமேடு, பண்ருட்டி வட்டம். | ரூ. 5800.00 |

வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள ஸ்ரீசாய்ராம் பேட்டரி, பண்ருட்டி நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை ஏற்று நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழங்கி வழங்கல் உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோ.எண்., 0460/இ1/2020

8. பண்ணுருட்டி நகராட்சி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–20–ன் கீழ் போலீஸ் லைன் 6வது தெருவில் 8 மீட்டர் உயரம், 80 வாட்ஸ் 6 எண்ணிக்கையிலான LED விளக்குகள் 125 வாட்ஸ் பேட்டரி மற்றும் இதர உபகரணங்களுடன் கூடிய சோலார் விளக்கு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர்ர் மாவட்ட ஊரக வளர்ச்சி முககம, கடலூர் அவர்களின் செயல்முறை ந.க.எண் அ3/4179/19 நாள். 09.03.2020–ந் தேதிய நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை நகரமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**கோ.எண். 0191 / இ1 / 2020**

9. இந்நகராட்சியில் வருவாய் நிதி 2019–2020–ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்கு சொந்தமான TN 31 AH 7374 பொலிரோ ஈப்பு வாகனத்திற்கு 4 எண்கள் கொண்ட புதிய டயர்கள் சப்ளை செய்யும் பணிக்கு நகரமன்றம் தனது தீர்மான எண். 505 நாள்.28.02.2020–ல் அனுமதி வழங்கி உள்ளதிற்கிணங்க 19.03.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | M/s. ஸ்டார் எண்டர்பிரைசஸ், பண்ருட்டி | 0.30 | ரூ.29,900.00 |
| 2. | M/s. ARS Tyres, கடலூர். | 0.30 | ரூ.31,000.00 |

**அலுவலக குறிப்பு :** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. ஸ்டார் எண்டர்பிரைசஸ், பண்ருட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, ரூ.29,900/– என கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 0354/2020/இ1**

10. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 02 விழமங்கலம் கோவிந்தன் தெருவில் ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறு மூலம் கோவிந்தன் தெரு, ராமன் தெரு, பொன்னப்பன் தெரு மற்றும் திரௌபதியம்மன் கோவில் தெருவிற்கு குடிநீர் சென்று கொண்டிருந்தது. தற்போது போர்வெல் மற்றும் மோட்டார் பழுதாகி பயன்பாட்டிற்கு லாயக்கற்ற நிலையில் உள்ளது. பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே, பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி வார்டு 02 கோவிந்தன் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து 10 HP நீர்மூழ்கி மோட்டார் பொருத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(அலுவலக குறிப்பு) 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 607/2020/இ2**

11. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள தெருக்களுக்கு குடிநீர் பிரதான குழாய் இல்லாததால் குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் பொது மக்களிடமிருந்து குடிநீர் இணைப்பு வேண்டி தொடர்ந்து மனுக்கள் வந்தவண்ணம் உள்ளது. பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி கீழ்கண்டுள்ள தெருக்களுக்கு குடிநீர் குழாய் அமைக்க ரூ.4.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

1. வார்டு–26 பிருந்தாவனம் நகர்
2. வார்டு – 25 பண்ருட்டியார் நகர்
3. வார்டு – 28 திடீர்குப்பம்
4. வார்டு – 28 முத்தையா நகர்

மேற்கண்ட தெருக்களுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(அலுவலக குறிப்பு) 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண் 608/2020/இ2**

12 பண்ணுருட்டி நகராட்சி, பொது சுகாதார பிரிவு 18.03.2020–ந் தேதியில் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு அவர்கள், பல்லாவரம் நகராட்சியில் Covid'19 வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்தான ஆய்வு கூட்டத்தில் இந்நோய் அதிவேகமாக பரவுவதாலும், இதனால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் அபாயம் மிக அதிகமாக உள்ளதாலும், இந்நோய் நோயுற்ற ஒருவர் சுவாசம் செய்யும்போது ஏற்படும் காற்று மாசுபாடு, இருமும்போது வெளிப்படும் எச்சில், மற்றும் ஒருவருக்கு ஒருவர் கை குலுக்கும்போது ஏற்படும் Conduct மூலம் பரவுவதாகவும், இதனை தமிழக முதல்வரின் அறிவுரைப்படி 'வருமுன் காப்போம்' என்ற அடிப்படையில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், பேருந்து நிலையம் இரயில் நிலையம், வழிபாட்டுத் தலம், தினசரி காய்கறி அங்காடி, பள்ளி, கல்லூரிகள், திரையரங்குகள், திருமண மண்டபங்கள், வியாபார ஸ்தலங்கள், வங்கிகள், ATM, அஞ்சலகம், பஸ் நிறுத்தும் இடம் ஆகிய இடங்களில், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை அவர்களின் வழிகாட்டுதலின்படி கிருமி நாசினி தெளிக்கவும் அறிவுறுத்தியதன் பேரில் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வீஸ், திருச்சி என்கிற நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கி இருந்து இதுநாள்வரை சப்ளை செய்யவில்லை. எனவே, கோரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்த வேண்டியுள்ளதாலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பொதுமக்கள், பொது சுகாதார நலன்கருதி உடனடியாக தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி அவசர கால விலைப்புள்ளி பெற்று சப்ளை செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவித் தொகை ரூ. 50.00 இலட்சத்திற்கும் ( ஐம்பது லட்சம்) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் செலவு மேற்கொள்ளவும், விலைப்புள்ளி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.50.00 இலட்சத்திற்கு (ஐம்பது லட்சம்) மன்றத்தின் முன் அனுமதி வேண்டி ஆணையரின் உத்தரவிற்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 0438 / 2020 / எச்1**

13. இந்நகராட்சியில் கடலூர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020–ம் ஆண்டிற்கு போலீஸ் லைன் 6வது தெருவில் 8மீ உயரம், 80 வாட்ஸ், 6 எண்ணிக்கையிலான LED விளக்குகள் 125 வாட்ஸ் பேட்டரி மற்றும் இதர உபகரணங்களுடன் கூடிய சோலார் விளக்கு அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 09.03.2020ந் தேதிய ந.க.எண். அ3/4179/19 எண்ணிட்ட செயல்முறை ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கி உள்ளதிற்கிணங்க 27.03.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம்/குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | M/s. P&B Enterprises, ஈரோடு. | 7.50 | 0.08% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 2. | M/s. Britex Lighting Pvt. Ltd., Namakkal | 7.50 | 0.18% மதிப்பீட்டிற்கு அதிகம் |

**அலுவலக குறிப்பு :** 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. P&B Enterprises, ஈரோடு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட 0.08% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 0191/2020/இ1**

14. பண்ணுருட்டி நகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 13.01.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில் ) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி/M/S | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கெடிலம் ஆற்றில் நடைபெறவுள்ள ஆற்றுத்திருவிழாவிற்கு வருகை தரும் பொது மக்கள் அமர்ந்து சாப்பிடவும் சாமி சிலைகள் நிற்பதற்கு ஏதுவாக தற்காலிக கொட்டகைகள் அமைத்திடவும் வருகை புரியும் பொது மக்களுக்கு குடிநிர் வசதி தெருமின்விளக்குகள் மற்றும் ஆண், பெண்களுக்கு தனித்தனியே தற்காலிக கழிப்பிடம் அமைத்தல் பணி | 2.50 | திரு. N.R. முருகன் பண்ணுருட்டி | – | 0.24% |
| | | | திரு. வி. சுரேஷ்பாபு கடலூர் | 0.81% | – |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்ததாரர்களில் திரு. N.R. முருகன், அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.24% சதவிகிதம் குறைவாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1. மன்றம் அங்கீகரிக்கலாம்

2. பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

இடம் – பண்ணுருட்டி நகராட்சி
நாள் – 31–03–2020

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
பண்ணுருட்டி நகராட்சி.